Koviloor Digital Library

திருப்பதி யாத்திரை

Pilgrimage to Tirupathi

(A GUIDE BOOK)

கோவிலூர்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்
8126
Q1:38
33-1

Published by :

S. PARTHASARATHY IYENGAR

TIRUMALAI HILLS

1946

1522/95

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீவேங்கடேசாய நமஹ :

33-1

திருப்பதி யாத்திரை

(Pilgrimage to Tirupathi)

Published by :

S. PARTHASARATHY IYENGAR

TIRUMALAI HILLS

All Rights Reserved] 1946 [Price As. 8

Koviloor Digital Library

ஸ்ரீராமஜெயம்.

மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கயதே கிரிம் !
யத் க்ருபா தமஹம் வந்தே பரமானந்த மாதவம் !!

முகவுரை

ஸ்ரீயப்பதியான ஸ்ரீமன் நாராயண மூர்த்தி ஸ்ரீவேங்கடாசலபதி யெனும் திருநாமத்துடன் பிராபல்யமுடையவராய் ஸ்ரீசேஷாசலத்தின் மீது திருக்கோயில் கொண்டெழுந்தருளி பக்த கோடிகளுக்குச் சதுர்வித புருஷார்த்தங்களையும் அனுக்ரஹித்து வருகின்றார். பகவன் எழுந்தருளியிருக்கும் இப்புண்ணிய க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்கின்ற பக்த கோடிகளுக்கு, சேவைசெய்யும் கருத்துடனே யாத்ரீகர்களுக்கு பிரயோசனகரமான முக்கிய விஷயங்களடங்கிய இச்சிறு புத்தகத்தை ஸ்ரீவேங்கடேஸ்வரருக்கு அர்ப்பணம் செய்து வெளியிடுகின்றோம்.

இப்புத்தகத்தில் அடங்கியுள்ள முக்கிய விஷயங்களாவன :— (1) திருப்பதி மலையின் புராண வரலாறுகளும், ஸ்ரீவேங்கடாசலபதி அர்ச்சாவதாரமான விஷயமும்; (2) கோவிலேற்பட்ட காலமும், இன்றுவரையுள்ள நிர்வாகமும்; (3) திருப்பதிக்ஷேத்திரத்திற்கு ரயில் பிரயாண மார்க்கம்; (4) திருப்பதியில் தங்குமிட வசதியும் மலை ஏற பிரயாண வசதிகளும்; (5) மலைமீது தங்குமிட வசதி; (6) ஸ்ரீவேங்கடேஸ்வரராலயத்திலுள்ள மண்டபங்கள், சன்னதிகள் விவரம்; (7) ஸ்ரீஸ்வாமிக்கு,பிரார்த்தனைகள் செலுத்தும் விஷயமும், சேவைகளும்; (8) சன்னதியில் பிரதி தினம் நடக்கும் காரிய கிரமங்கள்; (9) உற்சவங்களும், மலைமீதுள்ள முக்கிய தீர்த்தங்களும், போன்ற வெல்லா விவரங்களும் எளிய நடையில் யாவரும் வாசித்ப் புரிந்து கொள்ளக்கூடியவாறு எழுதப்பட்டுள்ளது.

S. பார்த்தஸாரதி அய்யங்கார்,

திருமலை.

Koviloor Digital Library

33-1

திருப்பதி
ஸ்தல புராணம்

"வேங்கடாத்ரி சமம் ஸ்தானம் ப்ருஹ்மாண்டே
நாஸ்த்தி கிஞ்சன !
வேங்கடேச சமோ தேவோ நபூதோ நபவிஷ்யதி!!

1

கலியுக வைகுண்டமாகிய திருப்பதிமலை புண்ணிய க்ஷேத்திரங்களில் பிரதானமாய் விளங்குகின்றது. பக்த கோடிகளுக்கு சர்வாபீஷ்டங்களையும் அனுக்ரஹித்து

"கலௌ வேங்கட நாயக:" என்று பிரசித்தி பெற்றுத் திகழும், திருப்பதி ஸ்ரீவேங்கடேஸ்வரஸ்வாமிக்கு வாசஸ்தலமாய் விளங்கா நின்ற திருமலைக்கு குடும்ப சமேதமாக யாத்திரை செய்து, ஸ்ரீவேங்கடாசலபதியைச் சேவித்து ஜென்ம சாபல்யம் அடைய வேண்டுமென்ற அபேக்ஷை ஒவ்வொரு ஹிந்துவுக்கும் உண்டென்பது சொல்லாமலே விளங்கும். இத்திருப்பதி புண்ணிய க்ஷேத்திரம் தமிழ் நாட்டிற்கு வடக்கு எல்லையாய் அமைந்திருக்கும் காரணத்தால் இம்மலையை "வடவேங்கட" மென்று துதிக்கப்படுகின்றது. தொல்காப்பியம், சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு, எனப்படும் புராதன நூல்களிலும் திருவேங்கடத்தைப்பற்றி கூறப்பட்டிருப்பதால், இந்தப் புண்ணிய க்ஷேத்திரம் ஆதிகால முதற்கொண்டே சிறப்புற்று விளங்கி வருகிறதென்பது தெளிவாகிறது. இம்மலை, மற்ற யுகங்களில் சாமானிய மனிதர்களின் கண்களுக்குப் புலப்படாமலிருந்ததாயும், இக்கலியுகத்தில்தான் யெல்லோருக்கும் காட்சியளித்து வருவதாகவும் புராணங்கள் மூலம் அறியப்படுகின்றது. மேலும், இம்மலை அனேக புண்ணிய தீர்த்தங்கள் நிறைந்ததாயும், மஹான்

Koviloor Digital Library

களும், யோகிகளும் சாமானிய ஜனங்களின் கண்களிற் படாமல் மறைந்திருந்து தவம் செய்ய அருகதையுடைய பற்பல குகைகளை உடைத்ததாயும் விளங்குகின்றது. இப்படிப்பட்ட தபோதனர்கள் இன்றும் இக்குகைகளில் இருந்துகொண்டு பிரதிதினமும் ஸ்ரீவேங்கடாசலபதியைத் தரிசித்துக் கொண்டிருப்பதாயும் நம்பப்படுகின்றது. ஓர் சில அதிருஷ்டசாலிகளும் இப்படிப்பட்ட மஹான்களிற் சிலரை எதிர்பாராத விதத்தில் தரிசிக்க நேரிட்டிருக்கின்ற காரணத்தால் இது ஊர்ஜிதமாகிறது.

தவிரவும், திருவேங்கடமலையில், ப்ருஹ்மா, ருத்ரன், ஸ்கந்தன், முதலியோர் தவம் செய்து வந்ததாகவும் புராணங்களின் மூலம் ஏற்படுகின்றது. தசரத சக்கிரவர்த்தி புத்திர சந்தானத்தைக் கோரி இங்கு தவம் செய்ததாயும், ஸ்ரீ அஞ்சனா தேவியும் இதே காரணத்திற்காக இங்கு தவம் செய்ததாயும் பற்பல புராணங்களின் வாயிலாகத் தெரிய வருகிறது. இம்மாதிரி யெத்தனையோ விஷயங்கள், இம்மலையின் பிரபாவத்தை யெடுத்துரைக்க, பதினெண் புராணங்களில் காணக் கிடக்கின்றன. மேலும், தமிழ் நாட்டில் அவதரித்த ஆழ்வார்களும், பற்பல சமய ஆசாரியர்களும் இம்மலையின் பிரபாவத்தை வேண்டியளவு புகழ்ந்தும் பாடித்துதித்திருக்கின்றனர். சேஷாசலமெனச் சொல்லப்படும் இத்திருமலையானது உருவத்தில் ஸ்ரீ ஆதிசேஷனேபோல் தோற்றமளிக்கின்றது. இம்மலை தெற்கு வடக்காகக் கடப்பை, கர்னூல் ஜில்லாக்கள் வரை வியாபித்திருக்கிறது. இம்மலையை யடுத்து அடர்த்தியான காடுகளில் ஏராளமான துஷ்ட மிருகங்களும் உண்டு. இது கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒருபாக மெனக் கூறுவது பொருத்தமாயிருக்கும். இம்மலையின் தலைப் பாகத்தில் ஸ்ரீவேங்கடாசலபதி எழுந்தருளியிருக்கும் திருமலை யென்னும் புண்ணிய க்ஷேத்திரமும், மத்தியில் அதாவது கடப்பை ஜில்லாவிலுள்ள நந்தையாலருகில் அகோபில மென்னும் க்ஷேத்திரமும், கர்னூல் ஜில்லாவில் கிருஷ்ணா நதியைத் தொட்டாற் போலிருக்கும் வால்

Koviloor Digital Library

33-1

போன்ற பாகத்தில் மல்லிகார்ஜுனஸ்வாமி யெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீசைல மெனப்படும் சிவ க்ஷேத்திரமும், அமைந்திருக்கின்றன. பொதுவாகப் பார்க்குமிடத்து சேஷாசல மெனப்படும் இம்மலை மீது முக்கியமான க்ஷேத்திரங்கள் அமைந்திருப்பதானது இதின் பிரபாவத்தைக் காட்டுகிறதெனலாம். நிற்க, ஸ்ரீவேங்கடாசலமெனப்படும் இம்மலை அமைந்த காரணத்தைச் சற்று ஆராய்வோம்.

க்ருத யுகத்தில் ஸ்ரீ சுவேதவராக அவதாரமெடுத்த ஸ்ரீமஹாவிஷ்ணு, பிரளயத்தால் சமுத்திரத்திற்குள் மறைந்துவிட்ட பூலோகத்தை மீட்டு, ஹிரண்யாக்ஷனையும் சம்ஹரித்து, பழயபடி உலகை யதாஸ்திதியிலமைத்தார். அந்த அவதாரத்துடனேயே பூவுலகில் நிவஹிக்கக் கருதி, ஸ்ரீவைகுண்டத்தில் உத்தியான வனமாகக் கருதப்பட்டதொரு பாகத்தை பூலோகத்திற்குக் கொண்டு வரும்படியாக கெருத்மானை ஆக்ஞாபித்தார். பகவானின் கட்டளைக்கிணங்கி ஸ்ரீ கெருத்மானும், பகவனுக்குச் செய்யாஸனமாய் விளங்கா நின்ற ஸ்ரீ ஆதிசேஷன் சகிதம் ஸ்ரீவைகுண்டத்தின் ஒரு பாகத்தைக் கொணர்ந்து பகவனிடம் சமர்ப்பித்தார். ஆதிசேஷனும் பகவத் ஆக்ஞைப் பிரகாரம் மலையாய் விளங்கலானார். ஆதலின் சேஷாசல மெனப்படும் இம்மலை, பூலோக வைகுண்டமாகியது. ஸ்ரீசுவேதவராக அவதாரமெடுத்த ஸ்ரீமகா விஷ்ணுவால் பூவுலகம் மீட்கப்பட்ட இக்காலத்தை ஸ்ரீசுவேதவராஹ கல்பமெனவும், அந்த அவதாரத்துடனே திருமலை மீது திருக்கோயில் கொண்டெழுந்தளி யிருப்பதால் இதற்கு ஸ்ரீ ஆதிவராக க்ஷேத்திரமெனவும், பெயர்கள் நிலைக்கலாயின. இன்றும், ஸ்ரீ பூவராகஸ்வாமியைத் தரிசித்த பின்பு தான் ஸ்ரீவேங்கடாசலபதியின் தரிசனத்திற்குச் செல்ல வேண்டுமென்ற முறைமையால் இது ஊர்ஜிதமாகிறதெனலாம்.

இத்திருமலைக்கு வெவ்வேறு யுகங்களில் வெவ்வேறு பெயர்க ளேற்பட்ட காரணத்தையும் ஈண்டு கூறுவாம்.

Koviloor Digital Library

க்ருத யுகத்தில் விருஷபாசுரனை ஸம்ஹரித்த பகவன் இம் மலை மீதே நிவஸித்தமையால் இதற்கு விருஷபாத்ரி யெனவும், ஸ்ரீ அஞ்சனாதேவி தவம் செய்து வாயு பகவனினருளினால் மகா பராக்கிரமசாலியான மாருதியைப் புத்திரனாய் அடைந்ததின் காரணத்தால் ஸ்ரீ அஞ்சனாத்திரி யெனவும், ஸ்ரீவராக அவதாரமெடுத்த ஸ்ரீமஹா விஷ்ணுவின் ஆக்ஞைப்படி ஸ்ரீ கெருத்மானால் கொண்டுவரப்பட்டதின் காரணத்தால் கெருடாசல மெனவும், ஆதி சேஷனே மலையாயமைந்ததின் காரணத்தால் சேஷாசல மெனவும், நாராயண னென்ற பெயருடைய விப்ரரொருவர் தவம் செய்து பகவனினருளைப் பெற்றதால் நாராயணாத்திரி யெனவும், தரிசனமாத்திரத்தில் சகல பாபங்களையும் போக்க வல்லதென்ற காரணத்தால் வேங்கடாசலமெனவும் (வெம்=பாபங்களை, கடம்=ஹதம் செய்யக்கூடிய, அசலம்=மலை;) இம்மலைக்கு விஜயம் செய்யும் பக்தர்களுக்கு ஞானத்தைக் கொடுக்கவல்லதென்ற காரணத்தால் ஞானாத்ரி யெனவும், பற்பலகாரணப் பெயர்களை உடைத்தாய் விளங்குகின்றது.

பாற்கடலில் ஸ்ரீ ஆதிசேஷன் மீது பள்ளிக்கொண்டெழுந்தருளிய ஸ்ரீமஹாவிஷ்ணு எல்லா ஜீவன்களையும் உஜ்ஜீவிக்க சங்கல்பம் கொண்டவராய் தயையே ரூபமாகியதுபோல், இப்பூவுலகத்தில் ஸ்ரீவைகுண்டத்தை ஸ்தாபித்து, சேஷாசலமென துதிக்கப்படும் இத்திருமலையையே உறைவிடமாகக் கொண்டு ப்ருஹ்மாதி தேவர்களாலும், ரிஷிகளாலும், மஹனீயர்களாலும் அனாதிகாலமாகப் பூஜிக்கப்பட்டு வருவதாக புராணங்களின் வாயிலாக அறிகின்றனம். இப்படிப்பட்ட சேஷாசலத்தின் மீது பகவன் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய வரலாற்றையும் புராணங்களின் மூலம் அறிந்தபடியே சுருக்கமாக யெடுத்துரைப்போம்.

ஒரு சமயம், ரிஷிகளுக்குள் திருமூர்த்திகளில் சுத்த சத்துவ பரம் பொருள் யாராயிருக்கக்கூடு

மென்ற சங்கை யெழுந்ததின் காரணமாய், ப்ருகுமாமுனி இதையறிய சங்கல்பம் கொண்டார். அதன்படியே, அவர் முதலில் பிரம்மலோகம் சென்றார். பிர்மாவோ ப்ருகுமாமுனியைக் கவனிக்காமல் தன் சிருஷ்டித் தொழிலிலேயே கவனஞ் செலுத்தியவராயிருந்தார். ஆதலின், ப்ருகு மஹரிஷி பிர்மா கேவலம் ரஜோகுண சம்பன்னரென்று தீர்மானித்து, பிர்மலோகம் விடுத்து, நேரே கைலாய மடைந்தார். பிருகு சென்ற சமயம், ருத்ரன் ஸ்ரீ பார்வதி தேவியுடன் ஏகாந்தத்திலிருந்து கொண்டு ப்ருகுவை அலட்சியஞ் செய்ததாயும், அதனால், சிவன் தமோகுணத்தவரென்று தீர்மானித்த ப்ருகு, கைலாயம் விடுத்து, நேரே ஸ்ரீவைகுண்டமடைந்தார். ஸ்ரீவைகுண்டபதியான ஸ்ரீமன்நாராயணமூர்த்தியோ ஆயிரம் பணமுடிகளுடன் கூடிய ஆதிசேஷன்மீது சயனித்து யோக நித்திரையிலாழ்ந்திருந்தார். ஆதலின் அவர் வரவை அறியாதிருந்ததை உணர்ந்த ப்ருகு மாமுனி, பகவனின் திருமார்பின்மேல் தன் காலால் உதைத்தார். உடனே, ஸ்ரீயப்பதியான பரந்தாமன் யோக நித்திரை கலைந்து, ப்ருகுவின் வரவை அறிந்து, வலிமை பொருந்திய தனது திருமார்பிலுதைத்ததால் ப்ருகுவின் பாதங்கள் நொந்ததோ யென்று பற்பல உபசாரவார்த்தைகளினால் போற்றி, ப்ருகுமாமுனிக்கு அளிக்கவேண்டிய மரியாதைகளான அர்க்ய பாத்யாதிகள் சமர்ப்பித்து அக மகிழ்ந்தார். ப்ருகுமாமுனியும் பகவனின் உபசாரங்களின் தன்மையை உணர்ந்து, சுத்த சத்துவ பரம் பொருள் ஸ்ரீமன்நாராயணனே யென்று பகவனைத் துதித்துப் பின் தனதிருப்பிடம் சேர்ந்தார்.

ஸ்ரீமஹாவிஷ்ணுவின் திருமார்பையே தனதிருப்பிடமாய் பெற்ற லோகமாதாவாகிய ஸ்ரீமஹாலெக்ஷ்மி ப்ருகுவின் செய்கையினால் தனக்குற்ற அவமானத்தைச் சகியாதவராகி, கோபமடைந்து, பகவனைப் பிரிந்து, ஸ்ரீவைகுண்டம் விடுத்து, தன்யோகமாயையால் பாதாள லோகம் சென்று கபிலமா முனிவரால் பூஜிக்கப்பட்டு வரலானார்.

Koviloor Digital Library

ஸ்ரீமஹாலெட்சுமி தன்னைவிட்டுப் பிரிந்த காரணத்தால் ஸ்ரீகாந்தனான பரவாசுதேவன் விரக்தியடைந்தவராய் ஸ்ரீவைகுண்டம் விடுத்து, பூலோகமடைந்து, திருமலைமீதி லுள்ள காடுகளில் சஞ்சரித்துக்கொண்டு ஆங்காங்கு தவம் புரிந்து கொண்டிருந்த யோகிகளுக்குத் தரிசனமளித்துக் கொண்டும், சாமானிய மனிதர்களின் கண்களிற் படாமல் இருந்து வரலானார். இஃதிவ்வாறாக, பிர்ம்மாதி தேவர் களும், ரிஷிகளும், பகவன் இவ்விதம் சஞ்சரித்துக்கொண் டிருப்பின் பக்தர்கள் அவரைத் தரிசிக்க இயலாது போகு மென்றும், வரப்போகும் கலியுகத்தில் சாமானிய பாமரர் களும் பகவனைத் தரிசித்து பக்தி மார்க்கத்தைப் பின்பற்றி பகவத் அனுக்ரஹத்தைப் பெற வழி செய்யவேண்டு மெனக் கருதி பகவனை ஓரிடத்தில் திருக்கோயில் கொண் டெழுந்தருளியிருக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். அவர்களின் வேண்டுகோளிற்கிணங்கிய பகவனும் சாமான் னிய மனிதர்களுக்கு அர்ச்சாவதார ரூபத்திலும், பிர்ம் மாதி தேவதைகள், ரிஷிகள் முதலானஞானிகட்குத்தனது சுயரூபத்திலும் சேவை சாதித்தருள்கிறார். ஸ்ரீவைகுண்ட பதியும், பரவாஸுதேவனுமாய் விளங்காநின்ற ஸ்ரீமன் நாராயணமூர்த்தி, ஸ்ரீனிவாஸன் என்ற திருநாமமுடைத்த வராகி, தனது மூன் அவதாரமாகிய ஸ்ரீவராக அவதார பெருமைகள், சக்திக ளெல்லாவற்றையும் தனதுடமை யாக்கி திருமலையின் மீது திருக்கோயில் கொண்டெழுந் தருளி பிர்ம்மாதி தேவர்களாலும் மானிடர்களாலும் பூஜிக் கப்பட்டு விளங்குகின்றார்.

அர்ச்சாவதார ரூபியான பகவான் எப்படி புற்றி லிருந்து வெளிவரலானார் என்பதையும் சற்று சுவனிப் போம். பிர்ம்மாதி தேவர்களின் பிரார்த்தனைகளுக்கிணங்கிய ஸ்ரீமன்நாராயணன், ஸ்ரீவேங்கடாசலபதியென திருநாம முடைத்தவராகி அர்ச்சாவதாரமாக சேவை சாதித்தருள சங்கல்பம் கொண்டு, திருமலையின் மீது தற்சமயம் திருக் கோவிலமைந்திருக்கும் இடத்திலேயே ஒரு புற்றினடியில் யெழுந்தருளி யிருந்தார். பிர்ம்மா, ருத்திரன், இருவரும்

Koviloor Digital Library

முறையே பசுவும் கன்றுமாகி அரசனின் பசு மந்தைகளிற் கலந்துகொண்டு பிரதிதினமும் ஸ்ரீவேங்க்டாசலபதி அந்தர்தானமாக யெழுந்தருளியிருக்கும் புற்றில் பாலைச் சுரந்து வரலாயினர். தினந்தோறும் இந்தப் பசு மாத்திரம் அரண்மனை திரும்புங்கால் பால் வற்றி ஏரும் காரணத்தை அறியும்படி ஏவலாளர்களுக்கு அரசன் உத்திரவிட்டான். வழக்கம்போல் பசு புற்றின் மேல் பால் சுரந்துகொண்டிருப்பதைக் கண்ட ஏவலாளன் பசுவைத் தடிகொண்டு தாக்கவே, புற்றில் மறைந்திருந்த அர்ச்சாவதார ரூபியான பகவன் அவ்வடி பசுவின்மீது விழாதபடி தன் சிரசிற்றாங்கி வெளிப்பட்டார். இதைக்கண்ட ஏவலாளன் வியப்படைந்து ஓடோடியும் சென்று, நடந்த வரலாற்றை அரசனிடம் தெரிவித்தனன். அரசனும் தன் புடை சூழ தலத்திற்கு வந்து, பஹவான் அர்ச்சாவதாரமாகச் சேவை சாதித்தருள்வதைக் கண்டு வியப்படைந்து, பரமானந்தங் கொண்டவனாய், தன் அபசாரத்திற்காக மனம் வருந்தி பஹவானை வெகுவாகத் துதித்தான். அதன் பின்னர் தான், சுய வியக்தமாய் அர்ச்சாவதாரமாய் சேவை சாதித்தருளும் ஸ்ரீனிவாஸப் பெருமாளை சாமான்னிய ஜனங்களும் தரிசித்து வழிபட ஏதுவாயிற்றெனக் கூறின் மிகையாகாது.

இப்படியாக அர்ச்சாவதார ரூபமாக பிராபல்யமடைந்து வரலான ஸ்ரீவேங்கடாசலபதிஸ்வாமிக்கு முதன் முதலாக சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் ஸ்ரீதொண்டமான்சக்கரவர்த்தியென்பவரால் திருக்கோயில் கட்டப்பட்டதாக புராணம் மூலம் தெரியவருகின்றது. அதன் பின், பல்லவ, சோழ, ராஜ வம்சத்தரசர்களால் அவ்வப்பொழுது புதிய மண்டபங்களும், பிராகாரங்களும் எழுப்பப்பட்டதாயும் சரித்திரங்களின் வாயிலாக அறிகின்றனம். விஜயநகர ராஜவம்சத்தரசர்களால் வெகுவாக திருப்பணிகள் நடக்கப்பெற்றதாயும், பற்பல ராஜ குடும்பத்தினர்களால் அவ்வப்பொழுது ஏராளமான திரவியங்களும் ஆபரணங்களும் சமர்ப்பிக்கப்பட்டதாயும்,

Koviloor Digital Library

சிற்சில சிலா சாசனங்களின் மூலம் தெரியவருகிறது. இப்படியாக ஸ்ரீவேங்கடாசலபதியின் கோவில் சாமான்னிய மனிதன் முதல் அரசர்கள் வரையுள்ள எல்லோராலும் சமர்ப்பிக்கப்பட்ட திரவியங்களைக் கொண்டு ஆதி முதலே பிராபல்யமாய் ஐஸ்வரியமுடைத்ததாய் விளங்கி வருகின்றது. மொகலாயர்களின் படையெடுப்பால் விஜய நகர ராஜ்யம் சிதைவுற்றுப்போன பின்னர் வெகுகாலம் பக்தர்களாலும் சமயாசாரியர்களாலும் யாதொரு குறை பாடுகளு மின்றி பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. பிறகு மொகலாய அரசாட்சி ஒழிந்து, ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரின் ஆதிக்க காலத்தில் இந்த தேவஸ்தான நிர்வாகம் ஸ்ரீ ஹதிராம்ஜீ மடாதிபதியான ஸ்ரீமகந்துவாரிடம் ஒப்படைக்கப்பட்டது. சென்ற 1933ம் ஆண்டு சர்க்கார் உத்திரவின் பேரில் ஸ்ரீ ஹதிராம்ஜீ மடாதிபதிபதியின் நிர்வாகத்தை விலக்கி ஏழு பேர்கள் கொண்ட தொரு கமிட்டியும், பிரதான நிர்வாக அதிகாரியாக ஒரு கமிஷனரும் நியமிக்கப்பெற்று, தேவஸ்தான பரிபாலனம் செவ்வனே நடைபெற்று வருகின்றது.

இந்த சன்னதியில் வைகானச ஆகம விதிகளின்படி பூஜை நடந்து வருவதின் காரணம், ஆதியில் அர்ச்சாவதார ரூபியான ஸ்ரீனிவாஸப்பெருமாளை பிர்ம்மாவே ஆராதித்து வந்ததாயும், அதன் பின்னர் பிர்ம்மாவின் மானஸீக புத்திரரான ஸ்ரீவிகனச முனிவராலும், அத்திரி பிருகு, மரீசீ முதலிய தபோதனர்களாலும் ஆராதித்து வரப்பட்டாரென்றும், அதைத் தொடர்ந்தே பரம்பரையாக வைகானஸ அர்ச்சகர்கள் அவ்விதிகளின் படியே ஆராதித்து வருவதாகவும் புராணங்களின் வாயிலாக அறியப்படுகிறது. வைணவ சமயாசாரியரான ஸ்ரீ இராமானுஜர் இங்கு நடக்கவேண்டிய பூஜைகள் உற்சவங்கள் முதலியவற்றில் ஓர் ஒழுங்கை யேற்படுத்திய காலத்தும் வைகானஸ ஆகம பூஜா விஷயங்களில் யாதொரு மாறுதலையும் யேற்படுத்தாததும் குறிப்பிடத்தக்கது.

Koviloor Digital Library

ஆதலின், இப்படிப்பட்ட பிராபாவத்தை யுடைத்தாயும், புராதன க்ஷேத்திரமாயும், நூற்றெட்டு திருப்பதிகளில் பிரதானமாய் விளங்கும், இத்திருப்பதி யென்ற புண்ணிய க்ஷேத்திரத்திற்கு ஹிந்து மதத்தினரான ஒவ்வொருவரும் குடும்ப சமேதராய் விஜயம் செய்து சதுர்வித புருஷார்த்தங்களையும் அனுக்ரகிக்கும் தயாபரரான ஸ்ரீவேங்கடாசலபதியைத் தரிசித்து, ஸ்ரீனிவாஸனுடைய ச்ருபா கடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாவார்களாக.

2

கலியுகத்தில் பிரத்யக்ஷ தெய்வமாய் விளங்கா நின்ற ஸ்ரீவேங்கடாசலபதியைத் தரிசிக்க திருப்பதி புண்ணிய க்ஷேத்திரத்திற்கு விஜயஞ்செய்ய விரும்பும் யாத்ரீகர்கள் தெரிந்து சொள்ளவேண்டிய ரயில் பிரயாண மார்க்கமும், திருப்பதி யடைந்ததும் தங்குமிட வசதி, மலைக்குச் செல்ல ஏற்பட்டுள்ள பிரயாண வசதி போன்ற விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

ரயில் பிரயாண மார்க்கம்:—பெஜவாடா, விசாகப்பட்டணம், கல்கத்தா முதலிய விடங்களிலிருந்து வருபவர்கள் எம். எஸ். எம். ரயில்வேயி லமைந்துள்ள கூடூர் என்னும் ஜங்ஷனில் இறங்கி காட்பாடி செல்லும் ரயிலில் ஏறவேண்டும். இந்த வண்டி திருப்பதி வழியே செல்கின்றமையால், திருப்பதி கிழக்கு என்ற ஸ்டேஷனிலிறங்கலாகும்.

பம்பாய், மதருஸ் பக்கமிருந்து வருபவர்கள் எம். எஸ். எம்., ரயில்வேயி லமைந்துள்ள ரேணிகுண்டா யென்னும் ஜங்கிஷனிலிறங்கி, கூடூரிலிருந்து காட்பாடி செல்லும் ரயிலில் பிரயாணஞ் செய்து, திருப்பதி கிழக்கென்ற ஸ்டேஷனி லிறங்கவேண்டும். ரேணிகுண்டா ஜங்கிஷனிலிருந்து திருப்பதி யென்னும் புண்ணிய க்ஷேத்திரம் 6 மைல்கள் உளது.

Koviloor Digital Library

தமிழ் நாட்டிலிருந்தும், மைசூர் பக்கமிருந்தும்வரும் யாத்ரீகர்கள் எம். எஸ். எம்., ரயில்வேயி லமைந்துள்ள காட்பாடி யென்ற ஜங்கிஷனிலிறங்கி, கூடூர் செல்லும் கிளைப் பாதையில் பிரயாணஞ் செய்து, திருப்பதி கிழக்கென்ற ஸ்டேஷனிலிறங்க வேண்டும். இந்தப் பாதையில் திருப்பதி கிழக்கு யென்ற ஸ்டேஷனுக்கு முன் திருப்பதி மேற்கு யென்ற மற்றொரு ஸ்டேஷனும் உளது. ஆனால், யாத்ரீகர்கள் திருப்பதி கிழக்கு யென்ற ஸ்டேஷனிலிறங்குவதுதான் அவர்களுக்குச் சௌகரியமாக இருக்கும்.

திருப்பதி ஸ்ரீவேங்கடாசலபதி தரிசனத்திற்காகப் புறப்படும் யாத்ரீகர்கள், தாங்கள் புறப்படுமுன்பே திருப்பதியில் தங்கு மிடவசதி, தரிசன சௌகரியம், பிரார்த்தனைகளைச் செலுத்தும் விஷயம் போன்ற எல்லா விவரங்களையும் கோரி, திருமலை—திருப்பதி தேவஸ்தான கமிஷனர், திருப்பதி, சித்தூர் ஜில்லா யென்ற விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்வது, அவர்களுக்கு வெகுவாக உதவியளிப்பதாக யிருக்கும். தேவஸ்தானத்தார் யாத்ரீகர்களின் சௌகரியத்தை முன்னிட்டு, கூடூர், ரேணிகுண்டா, பாகாலா, திருப்பதி ஸ்டேஷன்களில் தங்கள் சிப்பந்திகளை நியமித்திருக்கின்றனர். இவர்களுக்குப் "பிலிகிரிம் கைட்ஸ்" (Pilgrim guides) யெனப் பெயர். இவர்கள் ஆங்காங்கு திருப்பதிக்கு யாத்திரை செய்யும் பிரயாணிகளுக்குச் சாத்தியமான உதவி புரிவார்கள்.

திருப்பதியில் தங்குமிட வசதி:—திருப்பதி கிழக்கென்ற ஸ்டேஷனி லிறங்கியதும், ஸ்டேஷனுக்குக் கிழக்குத் திக்கில் சுமார் 20 கெஜ தூரத்தில் அமைந்திருக்கும் பெரிய தேவஸ்தான சத்திரத்திற்குச் செல்லலாகும். இங்கு சூப்பிரண்டெண்டென்ற தேவஸ்தான அதிகாரி ஒருவர் உளர் யாத்ரீகர்கள் நேரே இவருடைய ஆபீசுக்குச் சென்றால் அங்குள்ள சிப்பந்திகள் தேவஸ்தான சத்திரத்தில் தங்குமிட வசதி செய்து கொடுப்பார்

Koviloor Digital Library

கள். இந்த சத்திரம் இதர பல க்ஷேத்திரங்களிலுள்ள சத்திரங்களைப் போலன்றி எல்லாவித சௌகரியங்களும் நிரம்பியது. மின்சார விளக்குகளுடன், தண்ணீர்க் குழாய் வசதியுடன் கூடியது. யாத்ரீகர்களின் சௌகரியத்தை முன்னிட்டு சத்திரத்தினுள்ளேயே ஒரு இலவச வைத்தியசாலை, போஸ்ட்டாபீஸ், ரயில்வே பிரயாண டிக்கட்டுகள் விற்கப்படும் எம். எஸ். எம்., ரயில்வேயைச் சேர்ந்த புக்கிங் ஆபீஸ் முதலியன ஏற்படுத்தப்பட்டுள்ளது. சத்திரத்தினுள்ளேயே காப்பி-போஜன சாலையும் உளது. மளிகை சாமான்கள் விற்கப்படும் கடைகளும் உள்ளன. சத்திரத்தில் சமையல் செய்து கொள்வதற்கான பாத்திரங்களும் கொடுத்துதவுவார்கள். இவ்வளவு வசதிகள் நிறையப் பெற்ற இந்த சத்திரத்திற்குத்தான் "கொத்த சத்திர மெனப் பெயர்". இதைத் தவிர ஸ்ரீராமர் சன்னதிக் கெதிரில், அதாவது பஜார் வீதியில் டவுன் போலீஸ் ஸ்டேஷனை யடுத்து புஷ்பத்தோட்ட சத்திர மெனப்படும் மற்றொரு தேவஸ்தான சத்திரமும் உளது. இதுவும் மின்சாரவிளக்குகள், தண்ணீர் சௌகரியங்கள் முதலிய சகல வசதிகளும் நிறையப் பெற்றவையாகும். இன்னும் சிற்சில தரும சத்திரங்களும், மைசூர் மஹாராஜா அவர்களின் சத்திரமும் உள்ளன.

திருமலை மீது திருக்கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீவேங்கடாசலபதி சன்னதிக்குச் செல்லப்பிரயாணவசதி முதலியன:—திருமலை மீது ஸ்ரீவேங்கடாசலபதி சன்னதி, திருப்பதி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மோட்டார் செல்லும் ரஸ்தாமூலம் சுமார் 15 மைல்களும், நடைபாதை மூலம் சுமார் 8 மைல்களும் உள்ளது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மலையடிவாரம் சுமார் 2 மைல்கள் உள்ளன. மலையடிவாரத்திற்குச் செல்ல வண்டிகளும் கிடைக்கும். படிக்கட்டுகள் அமையப்பெற்ற 7 மலைகளையும் யாத்ரீகர்கள் 3 மணி நேரத்தில் கடந்து செல்லலாகும். வழி முழுதும் மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மாலை நேரத்தில் சற்று தாமதமாய்

Koviloor Digital Library

புறப்பட்டாலும் மிருக பயம், திருடர் பயம் போன்ற யாதொரு அச்சமன்னியிலும் நடந்து செல்லலாகும். ஹிந்து மதத்தினரைத் தவிர வேறு மதத்தினர் மலை யேற அனுமதிக்கப்படுவதில்லை. இந்த 7 மலைகளும் மிகப் புனிதமாய்க் கருதப்படுகின்றமையால் யாத்ரீகர்கள் பாத ரக்ஷைகள் அணிந்து செல்லலாகாது. நடந்து செல்ல முடியாத நிலையிலிருக்கும் வயோதிகர்கள், குழந்தைகள் முதலானவர்களுக்கு டோலிகள் ஏற்பாடுசெய்து கொள்ள லாம்; அல்லது, மோட்டார்களிலும் வண்டிகளிலும் செல்லலாம். மலைக்குத் தேவஸ்தான மோட்டார் பஸ்ஸுகளும் ஓடிக்கொண்டிருக்கின்றன. கீழத் திருப்பதியி லிருந்து மலைக்குப் புறப்படுமுன் தேவஸ்தான சத்திர அதிகாரியிடம் தெரிவித்துக் கொண்டால், மலைமீது அவர் கள் தங்கி தரிசனம் செய்ய இடவசதி முதலானதுக்கு ஏற்பாடு செய்வார்கள்.

திருப்பதி மலைக்கு ஸ்ரீவேங்கடாசலபதியைத் தரி சிக்க வரும் பக்தர்கள், ஆண்டவனின் பரிபூரண அருளைப் பெற சாத்வீக குணத்துடனும், தரும சிந்தனையுடனும், பகவனின் அர்ச்சாவதாரத்தின் விசேஷத்தை அறிந்த வர்களாகி பகவனிடம் குன்ரு பக்தி யுடைத்து வர வேண்டுவது இன்றியமையாததென்பது நமது சான்ரோர் களின் புத்திமதியாகும். எம்பெருமானைத் தரிசிக்கச் செல்லுகின்ரோமென்ற கருத்தைத் தவிர உல்லாச யாத் திரையாக இம்மலைக்கு விஜயம் செய்வது யாதொரு நன் மையும் பயக்கா தென்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிரோம். ஆண்டவனி னருளினால் நாம் அடைந்துள்ள சகல வசதிகளையும் மனதில் உன்னி, இந்த ஜென்மத்தி லேயே, பிரத்தியக்ஷ தெய்வமாய் விளங்காநின்ற ஸ்ரீவேங் கடாசலபதியைத் தரிசித்து ஜென்ம சாபல்யமடைய வேண்டுமென்ற விரதம் பூண்டு, சகல நியம நிஷ்டைகளை யும் அனுஷ்டித்தவர்களாகி, ஆண்டவனின் தரிசனத்தை நாடி வருபவர்களே மஹா பாக்கியசாலிகள். ஸ்ரீவேங்க டாசலபதியிடம் பக்தி பூண்டு அவரருளெய்திய பக்தி

Koviloor Digital Library

மான்களின் சரித்திரங்களோ அனந்தம். இக்கலியுகத்தில் பகவன் பக்த கோடிகளுக்கு அவரவர்களின் க்ஷேமாபிவிருத்திற்கேற்ப அனேக விதங்களில் அனுக்ரஹித்து வரும் உண்மைகளை, இங்கு விஜயம் செய்யும் யாத்ரீகர்களிட மிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளின் எப்பேற்பட்ட நாஸ்திகர்களையும் மனமாற்ற மடையச் செய்யுமென்பதில் ஐயமில்லை. ஆதலின், யாவரும் பயபக்தியுடன் பகவனின் அனந்த நாமங்களைப் பஜித்தவர்களாகி ஸ்ரீவேங்கடாசலபதியைத் தரிசித்து, அவருடைய க்ருபா கடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாக வேண்டுமென்பது நமது பிரார்த்தனையாகும்.

திருமலைக்கு விஜயம் செய்கின்ற யாத்ரீகர்கள் வெகு காலமாக மதிக்கப்பட்டு அனுஷ்டானத்திலிருந்து வரும் அடியிற்கண்ட நெறிகளைக் கடைப்பிடித் தொழுகுவது பகவனுக்கு உவப்பானதாகும். (1) திருமலைமீது யாரும் பாதரக்ஷைகளணிதல் கூடாது; (2) கெர்ப்பஸ்திரீகளும் சாவு முதலானதாலேற்பட்ட எவ்வித தீட்டுள்ளவர்களும் மலை ஏறக்கூடாது. (3) ஸ்ரீ திருவேங்கடமுடையானைப் பூஜிப்பதற்குத் தவிர வேறு எந்தச்காரியத்திற்காகவும் புஷ்பங்களை உபயோகிக்கக்கூடாது. (4) மரக்கறி அல்லாத வேறு ஆகாரங்களை உட்கொள்வது, மயக்கம் தரும் பானங்களை அருந்துதல் போன்ற யாவும் தவிர்க்கப்பட வேண்டும். இந்த நெறிகளை திருமலை மீது ஒவ்வொருவரும் அனுஷ்டிக்க வேண்டியது வெகு முக்கியமானதென்பதை வற்புறுத்திச் சொல்லுகிறோம்.

திருமலை:—யாத்ரீகர்கள் திருமலையை யடைந்தும் ஆஸ்பத்திரிக்குச் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தேவஸ்தான விசாரணை ஆபீஸு (Enquiry Office)க்குச் சென்று தங்குமிட வசதியைக் கோரினால், அங்குள்ள தேவஸ்தான அதிகாரி ஏதாவதொரு தரும சத்திரத்தில் இட வசதி செய்து கொடுப்பார். திருமலைமீதும் தேவஸ்தான தரும சத்திரங்கள் பல உள்ளன வாகையால், யாத்ரீ

Koviloor Digital Library

கர்கள் சௌகரியமாகத் தங்கி ஸ்ரீவேங்கடாசலபதியைத் தரிசித்து தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்தி வரலாம். எல்லா தேவஸ்தான தரும சத்திரங்களும் மின்சார விளக்குகள், தண்ணீர்க் குழாய்கள் முதலிய சகல வசதிகளுடன் அமையப் பெற்றுள்ளன. இந்த சத்திரங்களிலும் சமயல் செய்து கொள்வதற்கான பாத்திரங்கள் கொடுத்துதவுவார்கள். தேவஸ்தானத்தைச் சேர்ந்த "கோவாப்ரேடிவ் ஸ்டோர்" (Co-operative Stores) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. யாத்ரீகர்கள், தங்களுக்குத் தேவையான மளிகை சாமகன்களை சரசமான விலைக்கு இங்கு கிடைக்கப் பெறலாம். இதைத் தவிர இன்னும் பல கடைகளும் உள்ளன. காப்பி சாப்பாடு ஹோட்டல்களும் உண்டு இங்கு ஒரு தபால் ஆபீஸும், தேவஸ்தான தரும ஆஸ்பத்திரியும் உள்ளன. தேவஸ்தான தரும சத்திரங்களைத் தவிர, மேற்கு மாட வீதியில் மைசூர் மஹாராஜா அவர்களின் சத்திரங்களும் உள்ளன. இவைகளும் மின்சார விளக்குகள், தண்ணீர் வசதிகள்போன்றவெல்லா வசதிகளுடன் அமையப் பெற்றுள்ளது. மைசூர் மஹாராஜா அவர்களின் சத்திரத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பிராமண யாத்ரீகர்களுக்கு மத்தியானம் ஒரு பொழுது தருமமாக அன்னமளிக்கப் படுகிறது. இவைகளன்னியில் சிற்சில மடங்களும், தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாயுள்ளதும், யாத்ரீகர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டு வரும் சிற்சில வீடுகளும் உள்ளன. ஆதலின், யாத்ரீகர்கள் விருப்பப்படியே எந்தவிடத்தில் வேண்டுமாயினும் சௌகரியமாகத் தங்கலாம்.

மலைமீது யாத்ரீகர்கள் சௌகரியமாகத்தங்குவதற்கான இடவசதிகளைப் பற்றி மேலே சொன்னோமல்லவா? இனி, இத்திருமலையின் இயற்கை யமைப்பைப் பற்றியும், இங்குள்ள சீதோஷ்ணஸ்திதியின் தன்மையும் போன்ற விஷயங்களைப்பற்றியும் கூறுவோம்:-திருமலை யெனப்படும் இப்புண்ணிய க்ஷேத்திரம் சேஷாசல மெனப்படும் ஏழு மலை

Koviloor Digital Library

களின் மீது சமுத்திர மட்டத்திற்குச் சுமார் 2500 அடிகள் உயரத்தி லமைந்துள்ளது. ஆதலின், இந்த ஸ்தலம் சமதரையி லிருப்பதைக் காட்டிலும் அதிகக் குளிருடன் கூடிய சீதோஷ்ணஸ்திதி உடைத்ததாய் விளங்குகின்றது. இந்த க்ஷேத்திரம், சுமார் 100 சதுர மைல்களுக்கு நாலா பக்கங்களிலும் துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கும் அடர்த்தியான காடுகளினால் சூழப்பட்டுள்ளது. தேவஸ்தானத்தைச் சுற்றி 10 சதுர மைல்களுக்குட்பட்ட காடுகள் நிறைந்த பிரதேசம் ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்வாமியைச் சேர்ந்தது. பிரதி வருஷம், மேமீ முதல் மார்ச்சுமீ வரை மலேரியாஜுரம் ஏற்படும் காலமெனவும், மார்ச்சுமீ முதல் ஜூலைமீ வரை, யாத்ரீகர்கள் யாதொரு ஜுர மேற்படுமென்ற பயமன்னியில் தங்களாகு மெனச் சொல்லப்பட்ட போதிலும், வருஷம் முழுதுமே யாத்ரீகர்கள் இந்த க்ஷேத்திரத்திற்கு விஜயஞ் செய்து கொண்டு தானிருக்கின்றனர். தேவஸ்தானத்தார் தங்கள் சொந்தச் செலவில் ஒரு ஹெல்த் டிபார்ட்மெண்டை யேற்படுத்தி மலேரியா ஜுரம் உண்டாவதைத் தடுக்க பெரு முயற்சிகள் செய்து வருவதின் பயனாக ஜுர மேற்படுவது வெகுவாகக் குறைந்து விட்டது எனலாம். மழைக்காலங்களிலும் குளிர்க்காலங்களிலு மிந்த க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்யும் யாத்ரீகர்கள், கம்பளி முதலான குளிர் தாங்கக்கூடிய போதிய ஆடை வசதிகளுடன் வருவது அவர்களுக்கு மிக்க பிரயோஜனமா யிருக்கும். ஸ்ரீவேங்கடாசலபதி திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்குமிந்த க்ஷேத்திரம், கோயிலைச் சுற்றி நான்கு வீதிகளமையப் பெற்றதாயும், ஓர் சில வியாபாரிகளும், தேவஸ்தான சிப்பந்திகள் வசிக்குமிடங்கள் தவிர பாக்கியுள்ள ஸ்தலமெல்லாம், தரும சத்திரங்களும், சிற்சில மடங்களும், தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாயுள்ள சில வீடுகளும் நிறைந்ததாய் விளங்குகின்றது. தேவஸ்தானத்தார் வீதிகளிலும், ஜனங்கள் நடமாடக்கூடிய எல்லா விடங்களிலும் மின்சார விளக்குக ளமைத்திருக்கின்றனர். தெருக்களிலும் தேவஸ்தான சத்திரங்களிலும் குழாய்கள்மூலம்

Koviloor Digital Library

நல்ல தண்ணீர் கிடைக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

யாத்ரீகர்கள் திருமலை சேர்ந்ததும் ஏதாவதொரு சத்திரத்திரலோ, அல்லது மடங்களிலோ தங்கு மிட வசதியைப் பெற்ற பின்பு, ஸ்ரீவேங்கடாசலபதியின் கோவிலுக்கு வடபுரத்தி லமைந்துள்ள ஸ்வாமி புஷ்கரணியில் ஸ்னாநஞ் செய்து, புஷகரணியின் வட மேல் பாகத்திலுள்ள கோவிலில் ஸ்ரீ பூவராக ஸ்வாமியைத் தரிசித்துக் கொண்டு, ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்வாமியின் கோவிலுக்குச் செல்வதுதான் முறமையும், ஆசாரமாகவு மிருந்து வருகிறது.

3

ஸ்ரீ வேங்கடேஸ்வராலயத்தினுள் கவனிக்கவேண்டிய முக்கிய குறிப்புகள் :—ஸ்ரீ பூவராகஸ்வாமியைத் தரிசித்துக்கொண்டு ஸ்ரீ வேங்கடாசலபதியின் சன்னதிக்கு வரவேண்டுமெனச் சொன்னோமல்லவா? கோவிலிற்குள் நுழையுமுன் பெரிய கோபுரத்தைக் காணலாம். இந்த வாயிலுக்குக் கோபுர வாயில் அல்லது "படிக்காவல்" எனப் பெயர். இதில் முக்கியமாய் கவனிக்கவேண்டுவதென்னவெனில் மற்ற ஆலயங்களுக் கிருப்பதேபோலன்றி, இந்தக் கோவிலுக்கு ஒரே ஒரு கோபுரவாயில்தானுண்டு. கோபுர வாயிலைக் கடந்து பத்தடிகள் சென்றால், இடது கைப்புறத்தில் நல்ல சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய ஸ்ரீரெங்க நாயகலு மண்டபத்தைக் காணலாகும். விஜய நகர ராஜவம்சத்தரசர்களி லொருவரான ஸ்ரீரங்கராஜா யென்பவரால் கட்டப்பட்டதின்காரணமாகவும், முகம்மதியர்களின் அட்டூழியங்கள் நடைபெற்ற காலத்தில் ஸ்ரீரெங்கனாதனை இம்மண்டபத்தில் எழுந்தருள்வித்து பூஜைகள் நடந்து வந்ததின் காரணமாகவும் இது ஸ்ரீரங்க மண்டப மென்ற பெயருடன் விளங்குவதாகச் சொல்லப்படுகின்றது. இந்த ரெங்க மண்டபத்தில்தான் மூன்று வருடங்களுக் கொருமுறை நவராத்திரி உற்சவத்

Koviloor Digital Library

தில் ஸ்ரீனிவாஸப் பெருமாளை எழுந்தருள்வித்து ஆஸ்தானம் முதலிய வைபவங்கள் நடைபெறுகின்றன. கோவிலினுள் முக்கியமாக நல்ல சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ள திருமலராய மண்டபம், கலியாண மண்டபம் முதலியன கவனிக்கத் தகுந்தது. ஸ்ரீவேங்கடாசலபதி எழுந்தருளியிருக்கும் மூலஸ்தானத்திற்கு மேல் மிகக் கம்பீரமாய் தோற்றமளிக்கும் விமானத்திற்கு ஆனந்த நிலைய விமான மெனப் பெயர். இந்த விமானத்தில் ஸ்ரீவிமான ஸ்ரீனிவாஸமூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். கீழண்ட விமான பிராகாரத்தில் ஸ்ரீவரதராஜஸ்வாமி சன்னதியும் வடவண்ட விமான பிராகாரத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் சன்னதியும், ஸ்ரீயோகா நரஸிம்ஹஸ்வாமி சன்னதியும் அமைந்துள்ளன.

ஸ்ரீவிராட் மூர்த்தி எழுந்தருளியிருக்கும் சன்னதிக்கெதிரில் ஸ்ரீகெருடாழ்வார் சன்னதியும், அதற்கடுத்தபடியாக "பங்காரு வாக்கிலி" அல்லது தங்க வாயிலெனப்படு மிடத்தில் இரு புறங்களிலும் "ஜய", "விஜய" வென்ற துவார பாலகர்கள் எழுந்தருளியிருக்கின்றனர். இதைத் தாண்டி உட்செல்லும் பொழுது மற்று மிரண்டு வாயிற்படிகள் தென்படும். இவைகளில் ஸ்ரீவிராட் மூர்த்திக்கருகில் அமைந்துள்ள படிக்குத்தான் குலசேகரப்படி யெனப் பெயர். இதைத் தாண்டி உள்ளே செல்ல பரம்பரை பாத்தியதையுடைய சிலரைத்தவிர மற்றவர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. மூலஸ்தானத்தில் மிகக் கம்பீரமும், பிரகாசமும், மூர்த்திகரமும் வாய்ந்த ஸ்ரீவேங்கடேஸ்வரஸ்வாமி சர்வாலங்கார பூஷிதராய் சேவை சாதித்தருள்கிறார். சன்னதியினுள் உற்சவ மூர்த்திகளும், ஸ்ரீராமன், கண்ணன் முதலிய எம்பெருமான்களும் எழுந்தருளி யிருக்கின்றனர். சன்னதியினுள் எப்பொழுதும் பிரகாசமாகவே இருக்கும்.

Koviloor Digital Library

பிரார்த்தனை செலுத்தும் விஷயம்.

யாத்ரீகர்கள் தாங்கள் சங்கல்பம் செய்துகொண்டுள்ள பிரகாரமே பிரார்த்தனைகளைச் செலுத்தவேண்டும். சிலர் யாதொரு பிரார்த்தனையும் செலுத்துவதாகச் சங்கல்ப மன்னியில் வருகின்றனர். இப்படிப்பட்டவர்கள் சுயநலமிகளின் சொல்லைக் கேட்டு தங்கள் திரவியத்தை நானாவழிகளிலும் செலவழித்து விட்டு மனது நிம்மதியின்றிச் செல்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் அவரவர்களின் சக்திக்கேற்ப நித்திய பூஜைகள், உற்சவங்கள், தளிகைகள் போன்ற எவைகளுக்கேனும் தங்கள் திரவியத்தைச் செலவிடுவது உசிதமானது.

யாத்ரீகர்கள், தங்கள் திரவியத்தை எந்தெந்த விதங்களில் பகவனுக்குச் சேரும்படி செய்யலா மென்பதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, இந்த சன்னதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள உற்சவாதிகள், சேவைகள், தளிகைகள் முதலான விவரங்களும், அதற்குறிய கட்டண விகிதங்களும் கீழே தரப்பட்டுள்ளது :—

ஆர்ஜிதம் அல்லது கட்டணம் செலுத்தி தரிசனம்

(சாதாரண தினங்களில்)

நெ.	விவரம்.	கட்டணம் ரூ. அ. ப.	ஷரா
1.	தோமால சேவை	13 0 0	ஒரு டிக்கட்டுக்கு 5 பெரியவர்கள்சன்னதியினுள் அனுமதிக்கப்படுவார்கள்.
2	சஹஸ்ர நாம அர்ச்சனை	7 0 0	ஒரு டிக்கட்டுக்கு 4 பெரியவர்கள் சன்னதியினுள் அனுமதிக்கப் படுகிறார்கள்.
3	அஷ்டோத்திர நாம அர்ச்சனை	7 0 0	,, 4 ,,
4	ஏகாந்த சேவை	13 0 0	,, 5 ,,

Koviloor Digital Library

வியாழக்கிழமை இரவில் மாத்திரம் பிரத்தியேகமான கட்டணம் செலுத்தி சேவை விவரம்.

நெ.	விவரம்.	கட்டணம் ரூ. அ. ப.	ஷரா.
1	பூலங்கி தரிசனம்	1 0 0	ஒரு டிக்கட்டுக்கு பெரியவர் ஒருவர் மாத்திரமே அனும திக்கப் படுவர்.

வெள்ளிக்கிழமைகளில் கட்டணம் செலுத்தி பிரத்தியேக தரிசன விவரம்.

நெ.	விவரம்.	கட்டணம் ரூ. அ. ப.	ஷரா.
1	விஸ்வரூப தரிசனம்	1 0 0	ஒரு டிக்கட்டுக்கு ஒரு பெரியவர் அனும திக்கப்படுவர்.
2	அபிஷேகம்	1 0 0	,, ,, ,,
3	தோமால சேவை	13 0 0	,, 5 ,,
4	அஷ்டோத்திர நாம அர்ச்சனை	7 0 0	,, 4 ,,
5	ஏகாந்த சேவை	13 0 0	,, 5 ,,

குறிப்பு :—வெள்ளிக்கிழமைகளில் சஹஸ்ரநாம அர்சனை நடைபெறுவதில்லை.

Koviloor Digital Library

ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு வாஹன உற்சவங்கள் செய்விக்கக் கட்டண விவரம்.

நெ.	வாஹனங்களின் பெயர்கள்	கட்டணம் ரூ.	அ.	ப.
1	வெள்ளி கெருட வாஹனம்	22	0	0
2	தங்க கெருட வாஹனம்	43	0	0
3	தங்க சேஷ வாஹனம்	42	0	0
4	சிறிய வெள்ளி சேஷ வாஹனம்	22	0	0
5	சூரிய பிரபை வாஹனம்	42	0	0
6	முத்திய பந்தல்	42	0	0
7	சர்வ பூபால வாஹனம்	42	0	0
8	கல்ப விருக்ஷ வாஹனம்	42	0	0
9	ஹனுமந்த வாஹனம்	22	0	0
10	யானை வாஹனம்	22	0	0
11	குதிரை வாஹனம்	22	0	0
12	சிம்ஹ வாஹனம்	22	0	0
13	ஹம்ச வாஹனம்	22	0	0
14	சந்திர பிரபை வாஹனம்	22	0	0
15	திருச்சி உற்சவம்	22	0	0

குறிப்பு :—மேலே தரப்பட்டுள்ள கட்டணம் ஹாரத்தி செய்வதற்கான கட்டண விகிதமும் சேர்ந்து என்பதை அறியவும்.

வஜ்ர கவசத்துடன் வாகனங்களுக்குறிய கட்டண விவரம்.

நெ.	வாகனங்களின் பெயர்கள்	கட்டணம் ரூ.	அ.	ப.
1	கல்பவிருக்ஷ வாகனம் (ஆரத்தி உள்பட)	62	0	0
2	சர்வ பூபால வாஹனம் ,,	62	0	0

Koviloor Digital Library

தளிகை விவரங்களும், கட்டண விகிதங்களும்

நெ.	விவரம்.	கட்டணம் ரூ. அ. ப.	ஷரா.
1	பொங்கல்	35 0 0	நிவேதனமான பின்பு இந்தத்தளிகைகளெல்லாம் செய்து வைப்பவர்களிடமே ஒப்பு விக்கப்படுகிறது.
2	சர்க்கரைப்பொங்கல்	40 0 0	
3	புளியோதரை	35 0 0	
4	தத்தியோதனம்	30 0 0	
5	சீரா	85 0 0	
6	கேஸரிபாத்	55 0 0	
7	சாகரபாத்	50 0 0	
8	பாயசம்	45 0 0	
9	*தளிகை வர்த்தனை	13 0 0	

*இதற்கு வேண்டிய சாமான்கள்யாவும் கொடுப்பதாயிருந்தால் மட்டுமே இந்த கட்டணம் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

பணியார நிவேதனங்களும், அவைகளின் கட்டண விகிதங்களும்

நெ.	விவரம்.	கட்டணம் ரூ. அ. ப.	ஷரா.
1	சர்க்கரை அல்லது வெல்ல லட்டு	55 0 0	30 லட்டுகள் நிவேதனத்திற்குப்பின் அவர்கள் வசம் கொடுக்கப்படும்.
2	ஜிலேபி	75 0 0	30 ஜிலேபிகள் ,,
3	வடை	40 0 0	30 வடைகள் ,,
4	மனோஹரம்	40 0 0	30 மனோஹரம் ,,
5	அப்பம் அல்லது அதிரசம்	35 0 0	30 அதிரசம் ,,
6	தேன்குழல்	32 0 0	30தேன்குழல்கள் ,,
7	சுகியன்	30 0 0	30 சுகியன்கள் ,,
8	போளி	30 0 0	30 போளிகள் ,,
9	தோசை	30 0 0	30 தோசைகள் ,,

Koviloor Digital Library

அதிக கட்டண விதிதங்களோடு செய்விக்கும் பிரத்தியேக உற்சவங்களாவன.

நெ.	உற்சவங்களின் பெயர்.	கட்டணம். ரூ.	அ.	ப.
1	முதல் தர பிர்ம்மோற்சவம்	1005	0	0
2	இரண்டாம் தர பிர்ம்மோற்சவம்	900	0	0
3	மூன்றும் தர பிர்ம்மோற்சவம்	650	0	0
4	நான்காம் தர பிர்ம்மோற்சவம்	570	0	0
5	ஐந்தாம் தர பிர்ம்மோற்சவம்	525	0	0
6	பூலங்கி சேவை	60	0	0
7	புளிக்காப்பு சேவை	450	0	0
8	கர்ப்பூர கிண்ணி	250	0	0
9	புனுகுச் சட்டம் கிண்ணி	85	0	0
10	ஜவ்வாது கிண்ணி	65	0	0
11	கஸ்தூரி கிண்ணி	50	0	0
12	சஹஸ்ர கலசாபிஷேகம்	1005	0	0
13	வசந்தோற்சவம்	1500	0	0
14	கலியாண உற்சவம்	305	0	0
15	கோவிலாழ்வார் திருமஞ்சனம்	500	0	0
16	பூரா திருப்பாவாடை	1400	0	0
17	அரைத் திருப்பாவாடை	700	0	0

குறிப்பு :—மேற்கண்ட உற்சவங்கள் செய்விக்க விரும்புமவர்கள் முன்னதாகவே தேவஸ்தான அதிகாரிகளுக்கு எழுதி ஏற்பாடு செய்து கொள்வது தேவஸ்தான நிர்வாகிகளுக்கும், அவர்களுக்கும் இரொம்ப சௌகரியமாக இருக்கும்.

Koviloor Digital Library

பிரார்த்தனைகள் செலுத்துவதில் சில முக்கிய குறிப்புகள்.

திருப்பதி மலைமீது ஸ்ரீவேங்கடாசலபதிக்குச் செலுத்தும் பிரார்த்தனைகள் பலவிதமாய் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. அவைகளில் முக்கியமானவைகள் :—(1) முடி கொடுப்பது. (2) அங்கப் பிரதக்ஷிணம் செய்வது. (3) நாணயம் அல்லது கற்கண்டு அல்லது வெல்ல துலாபாரம் போடுதல். (4) வர்த்தனை செலுத்தி ஆபரணங்களும், வஸ்திரங்களும் சமர்ப்பித்தல். (5) வர்த்தனை கட்டி பசுமாடுகளை சன்னதிக்குச் சமர்ப்பித்தல் போன்ற வகையில் நடைபெற்று வருகின்றது.

KOVILOOR MADALAYAM (Reg. No. 1/1/1/

Koviloor Digital Library

வெகுமானத்துடன் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்படு கின்றது.

அமந்தரண உற்சவம் செய்துவைத்தல் :— அதாவது, பகவானுக்குப் பிரதிதினம் நடைபெற்றுவரும் பூஜைகள், நெய்வேத்தியங்களுக்கான ஒரு நாள் செலவைத் தாங்கள் ஏற்றுக்கொண்டு நடத்திவைப்பதாகும். இதற்குக் கட்டணம் ரூபாய் 100. ஸ்ரீவேங்கடாசலபதிக்கு நடக்கும் முதல் பூஜையாகிய தோமால-சேவை யென்பது ஆரம்பமாகுமுன், சங்கல்பம் செய்வித்து முதல் பூஜை ஆரம்பிக்கப் படுகிறது. ஒரு நாளில் நடைபெறும் பிரதான பூஜைகளான தோமால சேவை, அர்ச்சனை, ஏகாந்த சேவை ஆகிய மூன்று காலங்களிலும் செய்து வைப்பவருக்கு முதல் தரிசனம் கிடைக்கிறது. இதற்குக் கட்டணம் செலுத்தியவர் தன் குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர்களுடன் பிரதான பூஜைகள் நடக்கும் சமயம் சன்னதியினுள் இருந்து பகவானைத் தரிசிக்க அனுமதிக்கப் படுவார்கள். இந்த உற்சவம் நடத்தி வைப்பவர்களின் சார்பில் பகலில் ஒரு பொங்கல் தளிகையும், இராத்திரி நிவேதனத்திற்கு தோசையும் சமர்ப்பிக்கப்பட்டு மேற்படி பிரசாதங்களும் அவர்களிடமே ஒப்படைக்கப்படுகின்றன.

கலியாண உற்சவம் :— இதற்குக் கட்டணம் ரூ. 305 ஸ்ரீவேங்கடாசலபதியை ஸ்ரீதேவி, பூதேவி சகிதம் கலியாண மண்டபத்தில் எழுந்தருளுவித்து திருக்கலியாணம் நடைபெற்று அந்தத் திருக்கோலத்துடனே வீதி வலமாக எழுந்தருளுச் செய்கிறார்கள். இதற்கு நான்கு வகைத் தளிகைகளும், லட்டு, வடை, அப்பம் ஆகிய திருப்பணியாரங்களும் செய்யப் படுகின்றது. கலியாண உற்சவம் செய்து வித்தவர்களுக்கு நிவேதனம் செய்யப்பட்ட திருப்பணியாரங்களில் வகைக்கு 30-ம் கொடுக்கப் படுவதோடு நால்வகை பிரசாதங்களும் அவர்கள் வசமே ஒப்படைக்கப் படுகின்றது. வஸ்திர வெகுமானத்துடன்

Koviloor Digital Library 8126

 Q1:38

கோவில் மரியாதைகளான மேளதாள வாத்தியங்களுடன் அவர்களைத் தாங்கள் தங்கியிருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்கின்றனர்.

பிர்ம்மோற்சவம் செய்து வைத்தல் :—ஐந்து தரங்களான பிர்ம்மோற்சவத்தில் அவரவர்களின் சக்தியைப் பொறுத்து எது வேண்டுமானாலும் செய்து விக்கலாம். இந்த உற்சவம் ஏழுநாட்களில் பூர்த்தியாகும். முதல் நாள் செய்து வைப்பதற்கான சங்கல்பத்துடன் ஆரம்பமாகிறது. பஹவானை வாஹனங்களின் மீது ஆரோஹணித்து வீதி வலமாக உற்சவம் நடைபெறுகின்றது. சேவார்த்திகளின் சௌகரியத்தை முன்னிட்டு, குறைந்த நாட்களில் இந்த உற்சவத்தை முடித்து வைக்க தேவஸ்தான அதிகாரி ஏற்பாடுகள் செய்யலாம். முதல்தர பிர்ம்மோற்சவம் செய்து வைப்பவர்களை தன் குடும்பத்தைச் சேர்ந்த 10 முதல் 20 பேர்கள் வரை, நித்திய பூஜைகளான தோமால சேவை, அர்ச்சனை, ஏகாந்த சேவை முதலியவற்றிற்குச் சன்னதியினுள் நின்று பூஜா விசேஷங்களைப் பார்க்க அநுமதிக்கின்றனர். இதற்கடுத்தபடியாயுள்ள மற்ற நான்கு தர உற்சவங்கள் செய்து வைப்பவர்களுக்கு தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த 10பேர்களே மேற்படி பூஜைகளைக் கண்டானந்திக்க அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த உற்சவம் முடிந்ததும் மேற்படியோருக்கு வஸ்திர வெகுமான மளித்து மேளதாள மரியாதையுடன் அவர்களிருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

சஹஸ்ர கலசாபிக்ஷேகம் :— இதற்குறிய கட்டணத்தை தேவஸ்தான ஆபீஸில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும். இவ்வுமயம், ஸ்ரீபோக ஸ்ரீனிவாஸ மூர்த்தியை துவாரபாலகர்கள் எழுந்தருளியிருக்கும் தங்கவாயிலில் எழுந்தருளச் செய்வார்கள். 1000 வெள்ளிக் கலசங்களில் தீர்த்தம் நிரப்பி, ஹோமம் முதலான

Koviloor Digital Library

தும் நடைபெற்று பகவானுக்கு சாஸ்திரோக்தமான திரு மஞ்சனம் நடைபெறுகின்றது. இந்த சேவையை எல்லா ரும் கண்டானந்திக்கலாம். இந்தமாதிரியான சஹஸ்ர கலசாபிஷேகத்திற்குத்தான் ஸ்ரீபோக ஸ்ரீனிவாஸமூர்த்தி குலசேகரப்படி தாண்டி வெளியில் எழுந்தருளுகிறார். சேவை செய்து வைத்தவர்களுக்கு வஸ்திர வெகுமானத் துடன் சகல மரியாதைகளும் நடைபெறுகின்றது.

வசந்தோற்சவம் செய்து வைத்தல்:—இதற்காக ஏற் படுத்தப்பட்டிருக்கும் துகையை தேவஸ்தான ஆபீஸில் கட்டி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும் இந்த உற்சவம் பத்து நாட்களுக்கு நடைபெறும். ஸ்ரீவேங்கடாசலபதி பிரதி தினமும் மண்டபத்திற்கு எழுந்தருளி, அலங்கார திருமஞ்சனமும் நடக்கப்பெறுகின்றது. அதன் பின் ஆஸ்தானமும் நடைபெறும். ஆஸ்தானம் முடிந்ததும் பகவன் வீதிவலமாய் எழுந்தருளுகிறார். இந்த உற்சவம் நடத்திவைப்பவர்கள் ஒரு நாளின் கடைசி பூஜையாகிய ஏகாந்த சேவை சமயத்தில் மாத்திரம் பகவனின் தரிச னத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

தளிகைகள்:—மேல் அட்டவணையில் தரப்பட்டுள்ள தளிகைகளில் எது வேண்டுமானாலும் செய்வித்து சமர்ப் பிக்கலாம். ஒவ்வொரு தளிகைக்கும் பிரத்யேகமா யேற் பட்டுள்ள கட்டணத்தை தேவஸ்தான ஆபீஸில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும். தளிகைகள் நிவேதன மான பின்பு அவர்கள் வசம் ஒப்புவிக்கப் படுகின்றன. திருப்பணியாரங்களுக்குப் பணம் கட்டி செய்வித்தால், அவைகளில் வகைக்கு 30 உருப்படிகள் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பகவானுக்கு சாஸ்வதமாக பிரதி தினமோ அல்லது மாதத்தில் சில நாட்களுக்கோ அவர் கள் விரும்பும் தளிகை செய்து சமர்ப்பிக்க விருப்ப முண் டானால், அதற்காக தேவஸ்தானத்தார் கோரும் ஒரு துகையை மொத்தமாகக் கட்டிவிடும் பக்ஷத்தில், அந்தத்

Koviloor Digital Library

துகையின் மூலம் வரும் வருவாயைக்கொண்டு சாஸ்வத மாக நடக்க ஏற்பாடுகளும் செய்வார்கள்.

ஸ்ரீவேங்கடாசலபதி சன்னதிக்கு பசுமாடுகளை அளித்தல் :— பசுமாடுகளும் ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்வாமிக்கு பிரார்த்தனை செலுத்தும் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், அந்த மாட்டின் சுமார் மதிப்புள்ள தொகையையும் வர்த்தனையாகச் செலுத்தினால் தான் அவைகள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. பக்தர்களால் அளிக்கப்படும் இந்த பசுக்களினுடைய பால் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு அபிஷேகத்திற்காகவும், நெய்வேத்தியங்களுக்கும் உபயோகிக்கப் படுகின்றது. திருமலை மீது ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்வாமிக்குச் சொந்தமான பசுக்கள் நிறைந்த கோசாலையையும் காணலாம். தேவஸ்தானத்தால் சம்ரக்ஷிக்கப்பட்டுவரும் இந்த கோசாலையிலுள்ள பசுக்களெல்லாம் பெரும்பாலும் பக்தர்களால் பகவனுக்கு சமர்ப்பிக்கப்பட்டவைகளே யாகும்.

ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்வாமிக்கு ஆபரணங்கள் சமர்ப்பித்தல்:—சாதாரணமாக ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்வாமிக்கு சமர்ப்பிக்கும் ஆபரணங்களை யாத்ரீகர்கள் ஸ்வாமியின் உண்டியில் சமர்ப்பிக்கின்றனர். ஆனால், தாங்கள் சமர்பிக்கும் ஆபரணங்களை ஸ்வாமிக்குச் சாற்ற வேண்டுமென விருப்ப முடையவர்கள் அந்த ஆபரணங்களுடன் அவைகளின் மதிப்புக்குச் சமமான துகையையும் ரொக்கமாகச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்களின் விருப்பப்படி அவர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆபரணங்களை ஸ்வாமிக்குச் சாற்றுகிறார்கள். வர்த்தனை கட்டி சமர்ப்பிக்கப்படும் ஆபரணங்களை தேவஸ்தானத்தார் ஏலம் போடாமல் பகவனுக்கே சாற்றுகிறார்கள்.

ஸ்வாமிக்கு வஸ்திரங்கள் சமர்ப்பித்தல் :—பட்டு, பீதாம்பரங்கள் போன்ற உயர்ந்த வகைகளான வஸ்திரங்களும் பக்தர்களால் சமர்ப்பிக்கப் படுகின்றன. இப்படிப்பட்ட வஸ்திரங்களை ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்வாமிக்குச்

Koviloor Digital Library

சாற்ற வேண்டு மென்ற விருப்ப முடையவர்கள் மேற்படி வஸ்திரங்களை உண்டியில் சமர்ப்பித்து விடாமல், அந்த வஸ்திரத்தின் கிரயத்திற்குச் சமமான துகையுடன் ஆபீஸில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். உண்டியில் சமர்ப்பித்து விட்டால் ஏலம் போடப்படுகின்றது. ஆதலால், இந்த விஷயத்தில் தேவஸ்தான அதிகாரியைக் கலந்து கொண்டு அவர்களின் விருப்பப்படியே நடந்து கொள்ளலாம்.

ஸ்வாமி சன்னதியில் நெய்தீபங்கள் ஏற்றுத்தல் :— அதாவது, பகவானின் சன்னதியில் அவர்களின் சார்பில் நெய்தீபம் எரியும்படி ஏற்பாடு செய்வது. ஒரு நாளைக்கு ஒரு பலம் முதல் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு நெய் சமர்ப்பிக்கலாம். இது சாஸ்வதமாய் நடந்து வரும்படி செய்வதற்கு தேவஸ்தானத்தார் கோரும் துகையை அவர்களிடம் கொடுத்து ரசீது பெற்றுக் கொண்டால், தேவஸ்தானத்தார், அந்தத் துகையின் மூலம் கிடைக்கப்பெறும் வருவாயைக் கொண்டு மேற்படி கைங்கரியத்தை நடத்திவைப்பார்கள்.

ஆரத்தி அர்ச்சனைக்கு ஏற்பாடு செய்தல் :— சிலர் பிரதி தினமும் தங்கள் பெயரால் ஆரத்தி, அர்ச்சனை முதலியன நடக்கவேண்டு மென்று விரும்புவதுண்டு. அப்படிப்பட்டவர்கள், அவைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டண விகிதத்தைச் செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டால், பிரதி தினமும் அவர்களின் பெயரால் மேற்படி பூஜைகள் நடத்தப்படுகின்றன. அர்ச்சனைக்குக் கட்டணம் செலுத்தி யிருப்பவர்கள் அவர்கள் வரும் பொழுதெல்லாம் அந்த சேவைக்குச் சன்னதியினுள் சென்று சேவையை நடத்த அனுமதிக்கப்படுகின்றனர்.

திருப்பதி மலைமீது ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் நடக்கும் பூஜா விவரங்களுடன் கூடிய கால அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு பூஜை, சேவையைப் பற்றியும் அட்டவணையைத் தொடர்ந்து விவரமாய் கூறப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

திருப்பதி மலைமீது ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி சன்னதியில் நடக்கும் பூஜா விவரங்களும் கால அட்டவணையும்

சரியான காலம்		பூஜைகளின் பெயரும் தரிசனமும்	விவரம்.
முதல்	வரை		
காலை	காலை	சுப்ரபாதம்	பிரத்யேகமானது
காலை	காலை	விஸ்வரூப தரிசனம்	வெள்ளிக்கிழமைகளில் தவிர மற்றெல்லா தினங்களிலும் காலையில் நடக்கும் தரும தரிசனம்
காலை 9-30	10-30	தோமால சேவை	இது தரும தரிசனமல்ல. ரூ. 13செலுத்தி அனுமதிச் சீட்டுப் பெற்றவர்களே இந்தே சேவையைக் காண சன்னதியி லுள் அனுமதிக்கப் படுவார்கள்.
காலை 10-30	11-00	கொலுவு அல்லது தர்பார்	இதை எல்லாரும் தரிசிக்கலாம்

Koviloor Digital Library

தொடர்ச்சி

சரியான காலம்		பூஜைகளின் பெயரும் தரிசனமும்	விவரம்
முதல்	வரை		
காலை 11-00	12-00	சஹஸ்ர நாம அர்ச்சனை	இந்த அர்ச்சனை செய்துவைக்க விரும்புபவர்கள் ரூ. 7 செலுத்தி அர்ச்சனைச் சீட்டைப் பெறவேண்டும்,
காலை 12-00	12-30	நிவேதன சமயம்	பிரத்யேகமானது
மாலை 12-30	1-00	சாற்றுமுறை	ஸ்ரீவைஷ்ணவ பிராம்மணர்கள் மாத்திரம் சன்னதியினுள் அனுமதிக்கப் படுவார்கள்.
மாலை 1-00	3-00	மத்தியான தரும தரிசனம்	எல்லோரும் சென்று தரிசிக்கலாம்
மாலை 3-00	4-00	அஷ்டோத்திர நாம அர்ச்சனை	இந்த அர்ச்சனைக்கு ரூ. 7 கட்டணமாகியுள்ளது.

Koviloor Digital Library

மாலை 4-00	4-30	இரண்டாவது நிவேதன சமயம்	பிரத்யேகமானது
		இத்துடன் பகல்	பூஜை முடிவடைகின்றது
மாலை 4-30	7-00	ஆர்ஜித உற்சவங்கள்	கெருட உற்சவம், போன்ற உற்சவங்களுக்குக் கட்டணம் செலுத்தி யிருப்பின் இவைகள் நடக்கப்பெறும். கட்டணம் செலுத்துபவர்கள் மாலை 3 மணிக்கு முன்பே தேவஸ்தான ஆபீஸில் கட்டிவிட்டால் தேவஸ்தான அதிகாரியுகள் இந்த உற்சவங்களுக்கு ஏற்பாடு செய்விப்பார்கள்.
மாலை 7-00	8-30	இரவு பூஜைகளும் நிவேதனமும்	பிரத்யேகமானது
மாலை 8-30	9-30	இரவு தரும தரிசனம்	எல்லோருக்கும் தரும தரிசனம் கிடைக்கும்
		பிரதிவியாழக்கிழமை இரவு	தரும தரிசனம் கிடையாது

Koviloor Digital Library

தொடர்ச்சி

சரியான காலம்		பூஜைகளின் பெயரும் தரிசனமும்	விபரம்
முதல்	வரை		
		பிரதி வெள்ளிக்கிழமை	இரண்டாவது நிவேதனமான பின்புமாலை 5-30 முதல் 9-30 வரை ஒரே ஒரு தரும தரிசனம் தான் நடைபெறுகின்றது
மாலை 10-30		ஏகாந்த சேவை	இதைச் சேவிக்க விரும்புவோர்கள் ரூ. 13 செலுத்தி ஏகாந்த சேவைச் சீட்டைப் பெற வேண்டும்.

Koviloor Digital Library

திருப்பதி மலைமீதுள்ள ஸ்ரீவேங்கடாசலபதி சன்னதியில் பிரதிதினம் நடக்கும் காரியக்கிரமங்களும் தரிசன விஷயமும்

பிரதிதினமும் காலை 7-30 மணிக்கு மணிக்கதவம் திறக்கப்படுகின்றது. கோவில் கதவுகள் திறக்கப்பட்டதை பொது ஜனங்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு, கோவிலுக் கெதிரே உயரமானதொரு விடத்தில் அமைந்துள்ள கெண்டா மண்டபத்திலுள்ள மணி அடிக்கப்படுகின்றது. இந்த மணியின் ஓசை ஊரில் உள்ள எல்லா பாகத்திலிருப்பவர்களுக்கும் நன்றாகக் கேட்கும். இம் மணியின் சப்தத்தைக் கேட்டு ஜனங்கள் தரிசனத்திற்கு வருகிறார்கள். பிறகு ஸ்ரீ கெருடாழ்வார் சன்னதிமுன் பாக சன்னதி கைங்கர்ய பரர்கள் கோஷ்டியாக நின்று ஸ்ரீவேங்கடேஸ்வர சுப்ரபாதம் சேவிப்பார்கள். இதன் தாத்பரியம் பகவானை யோகத் துயிலினின்றும் எழுப்புவதாகும். இது முடிந்ததும், சுப்ரபாதம் சேவித்த சன்னதி கைங்கர்ய பரர்களுக்குத் திரை நீக்கி ஸ்ரீவேங்கடாசலபதியின் திவ்ய தரிசனம் அனுக்ரஹிக்கப் படுகின்றது. சன்னதியினுள் மேற்படி கைங்கர்ய பரர்களுக்குத் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்ட பின்பு, தரும தரிசனத்திற்கு பக்த கோடிகள் அனுமதிக்கப் படுகின்றனர். இந்த முதல் காலை தரிசனத்திற்குத்தான் விஸ்வரூப தரிசனமெனப் பெயர். இந்த தரும தரிசனம் நடைபெறுங் காலை பக்தகோடிக ளனைவரும் ஸ்ரீவேங்கடேஸ்வரஸ்வாமியைத் தரிசித்து வழிபடலாகும். இந்த தரிசன சமயம் பக்த கோடிகளுக்கு சன்னதியினுள் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்படுகின்றது. இதற்காக யாத்ரீகர்கள் அர்ச்சகர்களுக்கோ அல்லது இதர தேவஸ்தான சிப்பந்திகளுக்கோ யாதொரு சன்மானமும் அளிக்கத் தேவையில்லை. ஏனெனில், சன்னதியினுள் மேற்படியோர்கள் பக்த கோடிகளிடமிருந்து யாதொரு சன்மானமும் பெறுதல் கூடாதென்பது தேவஸ்தானத்தாரின் கொள்கையாகும். இந்த தரும

Koviloor Digital Library

தரிசனத்திற்குச் செல்லும் யாத்ரீகர்கள் பகவனுக்குக் கற்பூர ஆரத்தி செய்துவிக்க விருப்பினால் ஒரு ரூபாய் செலுத்தி ஆரத்தி சீட்டைப் பெறவேண்டும். கற்கண்டு திராக்ஷை போன்ற எதையேனும் பகவனுக்கு நிவேதனம் செய்ய வேண்டுமென விரும்பின், அதற்காக அவர்கள் கொண்டுவந்துள்ள வஸ்துக்களின் கிரயத்திற்குச் சமமான தொகையை செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டால் மேற்படி வகையறாக்கள் பகவனுக்கு நிவேதனம் செய்யப்பட்டு அவர்களிடமே கொடுக்கப்படும். மற்ற ஆலயங்களிலுள்ளதே போன்று இந்த சன்னதியில் தேங்காய் உடைத்து நிவேதனம் செய்யும் வழக்கம் ஆசாரத்தில் இல்லை. தேங்காய் உடைக்க விரும்பும் பக்தர்கள் சன்னதிக்கு வெளியில் விமான பிராகாரத்தில் உள்ள கற்பூர அகண்டத்திற்கு முன்பாக தாங்களே உடைத்து பகவனை வழிபடலாகும். இந்த விஸ்வரூப தரும தரிசனம் காலை 7-30 மணி முதல் 9-30 மணிவரை நடைபெறுகின்றது. சடைசி ஒருவருக்குத் தரிசனம் கிடைக்கும் வரையில் தரும தரிசனம் விடப்படுகிறதாதலின், யாத்ரீகர்கள் அவசரப்படாமலும் பிறருக்கு இடைஞ்சல்களை விளைவிக்காத வகையிலும் நிதானமாகச் சென்று பகவானை தரிசிக்கலாகும். சில சமயங்களில் அதாவது, விசேஷ உற்சவ காலங்களில் மேல் காரியங்கள் துரிதமாக நடக்கவேண்டியதை உத்தேசித்து தேவஸ்தான அதிகாரிகள் விஸ்வரூப தரும தரிசனத்தை நிறுத்திவிடவும் செய்கிறார்கள். தவிரவும், ஒரு வாரத்தில் பிரதி வெள்ளிக்கிழமையிலும் காலையில் நடக்கும் தரும தரிசனம் கிடையாது. ஏனெனில், அன்றையதினம் இந்த தரிசனம் பூலங்கி விஸ்வரூப தரிசனமெனவும், அதற்காக ரூ. 1 செலுத்தி அனுமதிச் சீட்டுப் பெற்றவர்களே பகவனைத் தரிசிக்கச் செல்லலாமென்பதும் வழக்கமாக இருந்து வருகிறது.

விஸ்வரூப தரிசனமான பின்பு சுத்தி நடைபெறுகின்றது. அதாவது, சன்னதியினுள் ஜலத்தைக்கொட்டி அலம்பி, ஈரமில்லாமல் துணியால் துடைத்தும், பூஜா

Koviloor Digital Library

பாத்திரங்கள் சுத்தி செய்யப்பட்டும், பகவனுக்கு முதல் பூஜைக்கான ஏற்பாடுகளைச் செய்வித்தலாகும். ஒவ்வொரு தரும தரிசனத்திற்குப் பின்னும் சுத்தி நடைபெறுகிறதென்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால், பகவனின் சன்னதி எப்பொழுதும் பரிசுத்தமாக வைக்கப்பட்டுள்ளது.

சுத்தி ஆனபின்பு முதல் பூஜை ஆரம்பமாகிறது. இதற்குத் தோமால சேவையெனப் பெயர். இவ்வமயம் ஸ்ரீபோக ஸ்ரீனிவாஸமூர்த்திக்கு சாஸ்த்ரோக்தமான திருமஞ்சனமும், ஸ்ரீவிராட்மூர்த்தி உள்பட சன்னதியினுள் எழுந்தருளியிருக்கும் எல்லா எம்பெருமான்களுக்கும் ஆராதனைகளும் நடக்கப்பெற்று புஷ்பங்களால் அலங்கரிக்கப் படுகின்றது. இந்தப் பூஜையின் சிறப்பைக் கண்டானந்திக்க விரும்பும் பக்தர்கள் ரூ. 13 செலுத்தி தோமால தேவை சீட்டைப் பெறவேண்டுமென ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அனுமதிச் சீட்டிற்கும், சீட்டு வைத்திருப்பவருள்பட 5 பேர்களனுமதிக்கப்படுகின்றனர். குழந்தைகளையும் கூட்டிச் செல்லலாம். தோமால சேவை சமயத்தில் பகவனைத் தரிசிக்கச் செல்பவர்கள், அவ்வமயம் பகவானுக்கு மங்கள ஆரத்தியும் செய்துவைக்க வேண்டுமென்று விரும்பின் பிரத்யேகமாய் ஒரு ரூபாய் செலுத்தி ஆரத்தி சீட்டும் பெற வேண்டும்.

தோமால சேவை முடிந்ததும், கொலு அல்லது "தர்பார்" என்பது நடைபெறுகின்றது. அதாவது, துவாரபாலகர்கள் எழுந்தருளியிருக்கும் தங்கவாயிலில் கொலு பீடத்தில் கொலு ஸ்ரீனிவாஸமூர்த்தியை எழுந்தருள்வித்து நித்ய பஞ்சாங்க சிரவணம், முதல் நாளைய வரவு செலவு கணக்குகளை பகவன்முன் வாசித்தல் போன்ற வைபவங்கள் நடைபெறுகின்றது. இந்த சேவையை எல்லாரும் கண்டானந்திக்கலாம்.

இதற்கடுத்தபடியாக சஹஸ்ரநாம அர்ச்சனை நடைபெறுகின்றது. இவ்வமயம் ஸ்ரீவேங்கடாசலபதியின்

Koviloor Digital Library

சஹஸ்ர நாமங்களையும் சொல்லி பகவனை துளசியாலும் புஷ்பத்தாலும் அர்ச்சிக்கின்றனர். இந்த சஹஸ்ரநாம அர்ச்சனையை நடப்பிக்க விரும்பும் யாத்ரீகர்கள் ரூ. 7 செலுத்தி அர்ச்சனைச் சீட்டைப் பெறவேண்டுமென ஏற்படுத்தப்பட்டுள்ளது. மங்கள ஆரத்தியும் செய்துவிக்க விரும்பின் ரூ. 1 செலுத்தி ஆரத்தி சீட்டையும் பெற வேண்டும். இந்த சேவைக்கு சீட்டு வைத்திருப்பவருள் பட நான்கு பேர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். குழந்தைகளும் கூடச்செல்லலாம். இதில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய தென்னவெனில் அர்ச்சனை சீட்டு பெற்ற வொவ்வொருவருக்கும் பிரத்யேகமான அர்ச்சனை நடைபெறுது. சஹஸ்ரநாம அர்ச்சனை ஒரு முறை நடப்பது எல்லோருக்கும் பொதுவாய்க் கருதப்பட வேண்டு மெனினும், அர்ச்சனை முடிந்ததும் ஒவ்வொருவருடைய நாம நட்சத்திரங்களைச் சொல்லி தனித்தனியே ஆசீர்வாதம் செய்யப்பட்டு, தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்படுவது, ஆச்சாரமாய் நடைபெற்று வருகின்றது.

அர்ச்சனை முடிந்ததும் நிவேதனம் நடைபெறகின்றது. இதற்கு யாரும் அனுமதிக்கப் படுவதில்லை. இவ்வமயம் பெரிய மணிகளிரண்டும் சேவிக்கப்படும். இந்த நிவேதன சமயம் சுமார் ½-மணி நேரத்திற்கதிகமாய் நடைபெறகின்றது. அதன் பின்னர் சாற்றுமுறையும், அதைத் தொடர்ந்து மத்தியானம் சுமார் 1-மணிக்கு தரும தரிசனமும் நடைபெறகின்றது. காலையில் விஸ்வரூப தரும தரிசனம் கிடைக்கப் பெறுதவர்கள் மத்தியான தரும தரிசனத்திற்குச் சென்று பகவனைத் தரிசிக்கலாம். பொதுவாக எல்லா தரும தரிசன காலங்களிலும் பக்த கோடிகள் யாதொரு நிர்பந்த மன்னியில் பகவனைத் தரிசிக்கச் செல்லலாம்.

மத்தியான தரும தரிசனமானபின்பு முதலில் சொல்லியுள்ளபடி சுத்தியென்பது நடைபெறகின்றது. சுத்தி ஆனதும் பகவனுக்கு அஷ்டோத்திர நாமார்ச்சனையும் நடைபெறகின்றது இந்த அர்ச்சனைக்கு ரூ. 7 செலுத்தி

Koviloor Digital Library

சீட்டுப் பெற்றுக்கொண்டவருள்பட நான்கு பேர்கள் அனுமதிக்கப் படுகின்றனர். மங்கள ஆரத்திக்கு ரூ. 1 பிரத்யேகமாய் செலுத்தி ஆரத்தி செய்யலாம். அர்ச்சனை முடிந்ததும் இரண்டாவது நிவேதனம் நடைபெறுகின்றது. இத்துடன் பகல் பூஜை முடிவடைகிறதெனலாம்.

பகவனுக்குக் கலியாண உற்சவம், கெருட சேவை போன்ற பற்பல விதமான உற்சவங்களைச் செய்துவிக்க கட்டணம் செலுத்தியிருப்பின், அப்படிப்பட்ட உற்சவங்கள் இந்த இரண்டாவது நிவேதனத்திற்குப் பின் நடைபெறும். என்னென்ன பிரார்த்தனைகள், உற்சவங்கள், சேவைகள் என்பதைப் பற்றி முன்னமே விவரிக்கபபட்டுள்ளன.

இராத்திரி நடக்கப்பெறும் தோமால சேவை, அர்ச்சனை, நிவேதனம் என்ற பூஜைகள் பிரத்யேகமாதலின் இந்த சேவைகளுக்கு யாரும் அனுமதிக்கப் படுவதில்லை. ஆயினும், இராத்திரி நெய்வேத்திய மானபின்பு நடைபெறும் தரும தரிசனத்திற்குச் சென்று பகவனை வழிபடலாகும். சிற்சில சமயங்களில் இராத்திரி பூஜை நடக்க நேரமாகிவிடும் பக்ஷத்தில் இராத்திரி தரும தரிசனத்தை நிறுத்தி விடவும் செய்கிறார்கள். பிரதிவாரம் வியாழக்கிழமையில் இரவு தருமதரிசன மென்பது கிடையாது. ஏனெனில், இந்த தரிசனம் பூலங்கி தரிசன மெனவும், இதற்காக ரூ. 1 செலுத்துபவர்களே சென்று தரிசிக்கலாமெனவும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

பிரதிதினமும் இரவு பூஜைகளான பின் ஏகாந்த சேவை யென்பது நடைபெறுகின்றது. இவ்வமயம் ஸ்ரீபோக ஸ்ரீனிவாஸ மூர்த்தியை மஞ்சத்தில் எழுந்தருளுவித்து பால்பழ வர்க்கங்கள் நிவேதனம் செய்யப்பட்டு இனிமையான சங்கீத வாத்தியங்களுடன் பகவனின்யோக நித்திரையின் சமயத்தை உணர்த்தும் ஒரு நாளின் கடைசி பூஜையாகக் கருதப்படுகின்றது. இந்த ஏகாந்த சேவைக்கு ரூ. 13 கட்டணமாகவுள்ளது இத்துடன்

Koviloor Digital Library

இரவு சுமார் 10.30 மணிக்கு திருக்காப்பு சேர்க்கப்பட்டு மணிக்கதவும் மூடப்படுகின்றது.

பிரதி வாரமும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நடக்கக்கூடிய விசேஷ பூஜைகளாவன :—பிரதி வியாழக் கிழமையும் இரவு நடக்கும் தோமால சேவை யென்பது பூலங்கி சேவையெனக் கொள்ளவேண்டும். அதாவது ஸ்ரீவிராட் மூர்த்தியின் திருமேனியில் சாற்றப்பட்டுள்ள எல்லா திருவாபரணங்களும் களையப்பெற்று, பகவனுக்கு சுகந்தமான வஸ்துக்களாலான அங்கி தயார்செய்து கிரீடம், கர்ணபத்திரங்கள் சகிதம் சாற்றி திவ்யமான சேவை நடைபெறுகின்றது. இதை ஒரு விசேஷமான சேவை யென்றேதான் சொல்லவேண்டும். இந்த பூலங்கி சேவை யின் பொழுதுதான் நேத்திர தரிசனம் ப்ராப்தியாகும். இந்த சேவைக்கு ரூ 1 கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாரம் வெள்ளிக்கிழமையில் காலை விஸ்வரூப தரிசனமென்பது விஸ்வரூப பூலங்கி தரிசன மெனவும் இதற்காக ரூ. 1 செலுத்துபவர்களே யிந்த சேவைக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்களென்று சொன்னோமல் லவா? வியாழக்கிழமை இரவு நடக்கும் பூலங்கி சேவை களையப்படாமல் அப்படியேயிருந்து வெள்ளிக்கிழமை காலையிலும் சேவையாகிறது. வெள்ளிக்கிழமை காலை யில் நடக்கும் தோமால சேவை, அர்ச்சனை முதலியன பிரத்யேகமானது. இதற்கு யாரும் அனுமதிக்கப்படுவ தில்லை. பகவனுக்கு முதல் நெய்வேத்திய மானபின்பு ஸ்ரீவிராட் மூர்த்திக்குத் திருமஞ்சனம் நடைபெறுகின் றது. இவ்வமயம், பால் திருமஞ்சனமும். திவ்யபரிமளா தியுடன் கூடிய கெங்கா அபிஷேகமும் நடைபெறுகின்றன. இந்த திருமஞ்சன சேவைக்கு ரூ. 1 கட்டணம் என்றேற் படுத்தப்பட்டுள்ளது. திருமஞ்சன மானபின்பு சமர்ப் பணை நடைபெறும் அதாவது வியாழக்கிழமை களையப் பட்ட திருவாபரணங்கள் மறுபடி சாற்றப்படுகிறது. சமர்ப்பணை முடிந்ததும் அஷ்டோத்திரநாம அர்ச்சனை நடைபெறும். இந்த அர்ச்சனையை நடத்திவைக்க

Koviloor Digital Library

விரும்புமவர்கள் ரூ. 7 செலுத்தி சீட்டுப்பெற்றுக்கொள்ள வேண்டும். இதைத் தொடர்ந்து இரண்டாவது நெய் வேத்தியம் நடைபெறுகின்றது. அதன்பின் சாற்று முறை நடைபெறும். சாற்றுமுறை ஆனவுடனேயே தரும தரிசனம் விடப்படுகின்றது. வெள்ளிக்கிழமை களில் மாத்திரம் இந்த ஒரே ஒரு தரும தரிசனம் தான் நடைபெறுகின்றது.

திருப்பதி மலைமீது ஸ்ரீவேங்கடஸ்வர ராலயத்தில் நடந்துவரும் முக்கியமான உற்சவங்களாவன

(1) புரட்டாசி மாதத்தில் பிரம்மோற்சவம். (2) மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதெசி உற்சவம். (3) தை மாதத்தில் இரத சப்தமி உற்சவம். (4) தெப்ப உற்ச வம். (5) வஸந்த உற்சவம். மேல்கண்ட நான்கு உற்ச வங்களுக்கும் ஏராளமான பக்த கோடிகள் திருப்பதி மலைக்கு விஜயஞ்செய்கின்ற ரெனினும் பிர்ம்மோற்சவத் திற்கு வரும் பக்த கோடிகளே அதிகம்.

திருப்பதி மலைமீதமைந்துள்ள முக்கியமான புண்ணிய தீர்த்தங்களாவன

(1) ஆகாச கெங்கை. (2) பாபவினாசன தீர்த்தம். (3) கோகெர்ப தீர்த்தம். (4) பாண்டவ தீர்த்தம். (5) சக்கர தீர்த்தம். (6) வைகுண்ட தீர்த்தம். (7) ஜாபாலி தீர்த்தம். (8) துருவ தீர்த்தம். (9) குமாரதாரா தீர்த் தம். (10) சனகஸநந்தன தீர்த்தம். (11) ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்தம். (12) தும்புரு தீர்த்தம். (13) ஸ்ரீ சேஷ தீர்த் தம், முதலியன. யாத்ரீகர்கள் சௌகரியமாய் போய் வரக் கூடிய தீர்த்தங்கள் பாபவினாசன தீர்த்தம், ஆகாச கெங் கை தீர்த்தம். இவைகளிரண்டும் கோவிலுக்கு வடக்கு திசையில் 3 மைல்களுக்கு உட்பட்டு நல்ல நடைபாதைக ளுடன் அமைந்துள்ளது. முதலில் பாபவினாசன தீர்த் தத்தில் ஸ்னாநஞ்செய்து, பிறகு ஆகாச கெங்கை தீர்த்தத் தில் ஸ்னானஞ் செய்யவேண்டும். ஆகாச கெங்கையி லிருந்து பிரதி தினமும் மூன்று குடங்கள் நிறைய தீர்த்

Koviloor Digital Library

தம் கொண்டுவந்துதான் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமிக்குப் பூஜைகள் நடக்கப்படுகிறது.

மற்ற தீர்த்தங்களெல்லாம் துஷ்டமிருகங்கள் சஞ்சரிக்கும் நடுக்காடுகளில் வெகு தொலைவில் உள்ளன வாகையால் யாத்ரீகர்கள் சாதாரணமாக தனிமையில் செல்ல இயலாது.

திருப்பதி மலைக்கு விஜயஞ்செய்யும் யாத்ரீகர்கள் தங்களுடன் ஊருக்கு எடுத்துச்செல்லக்கூடிய பிரசாதங்களாவன

(1) ஸ்ரீபாதரேணு :—இது ஸ்ரீவேங்கடாசலபதியின் திருமண்காப்பு. புனுகுத்தைலம் கலந்த பச்சைக் கற்பூரத்தாலானது. பகவனின் திருமேனி சம்பந்த முடைத்த தாதலின் சுசிருசியுடன் வைக்கவேண்டியது. விசேஷ தினங்களில் சிறிதளவு தீர்த்தத்துடன் கலந்து ஸ்ரீவேங்கடாசலபதியின் தீர்த்தமாக எடுத்துக்கொள்ளத் தகுந்தது. அநேக வருஷங்கள் கெடாமலிருக்கக்கூடியது.

(2) அபிஷேக தீர்த்தம் :—பிரதிவாரம் வெள்ளிக்கிழமையும் ஸ்ரீவிராட் மூர்த்திக்கு திவ்ய பரிமளங்கலந்த தீர்த்தத்தால் அபிஷேகம் செய்யப்படுவது. பகவனின் திருமேனி சம்பந்தமுடையது. தங்கள் ஊருக்கு எடுத்துச் சென்று பந்து, மித்திரர்களுக்கு வினியோகித்து தங்கள் புண்ணிய க்ஷேத்திரயாத்திரா பலித்தத்திற்கு ஆசிபெறுதல்.

(4) சந்தனம் :-பிரதிதினம் இரவு பகவனின் திருவடிகளில் சமர்ப்பிக்கப்படும் முக்கிய பிரசாதம். நெற்றியில் திலகமாக அணிவது.

(3) வடை, லட்டு, மனோஹரம், அப்பம் என்றநால் வகைப் பிரசாதங்களும் முக்கியமாக உடனெடுத்துச்செல்லக் கூடியது. பகவனுக்கு நிவேதனம் செய்யப்பட்ட மஹா பிரசாதங்களாகும்.

சுபம் !

கல்யாணத்புத காத்ராய காமிதார்த்தப் பிரதாயினே !
ஸ்ரீமத் வேங்கட நாதாய ஸ்ரீனிவாஸாய மங்களம் !!

Printed at the Indian Press—Q. H. Ms. 328—19-9-46— C. 2000
for S. Parthasarathy Iyengar, P. P. C. order A./46.—D. 15-4-46.

Koviloor Digital Library

8126 Koviloor Digital Library
201:38

TIRUMALAI
TOOTH POWDER

KOVILOOR MADHAYAM
KOVILOOR - 629 157
(NEAR) KARAIKUDI
PHONE 21-4444

BEST QUALITY

This **"TOOTH POWDER"** bears the name **"TIRUMALAI"**, an all India pilgrimage centre for Hindus where, the famous shrine of Lond Sri Venkateswara is situated on the Seven Hills. The Tooth Powder stands for its quality in comparison to the name and fame of the sacred place where, it is got prepared with country drugs and herbs available on the Seven Hills. The cost of "TIRUMALAI TOOTH POWDER" is considerably low in comparison to its quality. Regular use of "TIRUMALAI TOOTH POWDER" is sure to satisfy one and all.

"Always ask for TIRUMALAI TOOTH POWDER."

Price Rs. 0—2—0 Per Packet.

All orders are promptly attended to

For further particulars write to :—

S. PARTHASARATHY,
Congress Worker,
Tirumalai Hills : : Chittoor Dist.